**+2 வணிகவியல் முழு ஆண்டுத்தேர்வு மார்ச் 2019**

1.(அ) வாரிய அமைப்பு
2.(அ) கூட்டு வாரிசுதாரர்
3.(இ) தனியாள் வணிகம்
4.(அ) வியாபார இரகசியங்களை காக்க இயலும்
5.(இ) இணைவினை கூட்டாண்மை
6.(ஈ) 10
7.(அ) ஒப்பந்தத்தால்
8.(இ) நிறுமத்தின் அமைப்பு முறையேடு
9.(அ) நிறுமத்தின் செயல்முறை விதிகளின் மாதிரி
10(இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்
11.(ஆ) கலைப்பு அதிகாரி
12.(ஈ) சிறப்பு தீர்மானம்
13.(ஈ) கடனீட்டுப் பத்திர வெளியீடு
14.(ஈ) 21
15.(அ) தரகர் - தரணிவாலா
16.(இ) (1) – II (2) – III (3) – Iv (4) –i
17.(அ) கூட்டுறவு சங்கங்கள்
18.(அ) சரக்குகள்
19.(ஈ) இந்திய நிறும சட்டம் 1956
20.(இ) 51 %

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பொதுக் கழகத்தின் மேலாண்மை:** இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது அரசு நியமிக்கும் அலுவலர்களைக் கொண்டு இதன் இயக்குநரவை அமைக்கப்படுகிறது.

**22. வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. TWAD, TNEB, TNHB

**23. பி.கே. கோஷ் மற்றும் ஒய்.கே. பூஷன் ஆகியோரின் கூற்றுப்படி,** தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து, தன் சொந்த திறனையும் நுண்ணறிவையும் பயன்படுத்தி, வியாபாரத்தின் லாப நட்டங்களை தானே ஏற்றுக்கொள்ளும் ஒரு அமைப்பே தனி ஆள் நிறுவனம் ஆகும்.

**24. துணைக் கூட்டாளி** ஒரு கூட்டாளிக்கு கிடைக்கும் லாபத்தை இன்னொரு நபர் பங்கிட்டுக் கொண்டால் அந்நபர் துணைக்கூட்டாளி என்று அழைக்கப்படுகிறார். அத்துணைக் கூட்டாளிக்கு நிறுவனத்தில் எவ்வித உரிமையுமில்லை. நிறுவனக் கடன்களுக்கு இவர் பொறுப்பேற்பதுமில்லை

**25. மீட்க இயலா முன்னுரிமைப் பங்குகள்** மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் எனக் குறிப்பிட்டு வெளியிடப்படாத எம்முன்னுரிமைப் பங்குகளும் மீட்க முடியா முன்னுரிமைப் பங்குகளாகும். நிறுமம் தன் வாடிநநாளில் இவற்றை மீட்க இயலாது.

**26. குறைந்தளவு பங்கெடுப்பு** தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தளவு பங்கெடுப்புத் தொகையை ரொக்கமாகப் பெற்றாலன்றி, இயக்குநரவை பங்குகளை ஒதுக்கீடு செய்ய முனைதல் கூடாது.

**27. தோற்றுவிப்பாளர்** நிறுமம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற விருப்பம் இவர் உள்ளத்தில் உதிக்கிறது. தனது விருப்பத்தைப் பிறரிடம் கூறி, அதை உருவாக்குவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்பவர் இவரே.

**28. வருத்த மடல்:** பங்கு ஒதுக்கீடு செய்த பின், ஒதுக்கீட்டாளர்களுக்குக் கடிதம் அல்லது பங்கு ஆவணம் (Share Certificate) குறிப்பிட்ட நாட்களுக்குள் அதாவது பங்கொப்பப் பட்டியலின் கால அளவு முடிந்த தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும்.
**ஒதுக்கீடு பெறாத விண்ணப்பதாரர்களுக்கு** வருத்த மடலுடன் விண்ணப்பத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான காசோலையையும் அனுப்புதல் வேண்டும்.

**29. உபரிப் பகிர்வு:** கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை உறுப்பினர்களின் பங்களிப்பு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுவதல்லாமல் பங்குமுதல் அடிப்படையில் பகிர்ந்தளிப்பதில்லை. கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 72 (1) (a) - யின்படி சட்டபூர்வ ஒதுக்கீடுகள் போக ஆண்டுக்கு உறுப்பினர்களுக்கு 14 விழுக்காட்டுக்கு மிகாமல் செலுத்தப்பட்ட பங்குமுதலுக்கு பங்காதாயம் வழங்க சட்டம் அனுமதிக்கிறது. உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அடிப்படையில் மேலூதியம் வழங்கப்படுகிறது. இதற்கு பகிர்வுநிதி என்று பெயர்.

**30. லூயிஸ் எச். ஹேனே அவர்களின் கூற்றுப்படி,** அமைப்பு என்பது பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான, சிறப்பு வாய்ந்த பகுதியினைச் சரிகட்டக் கூடியதொன்றாகும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31.**நிறுமங்கள் சட்டம் **பங்கு முனைமத் தொகையை** முழுதும் செலுத்தப்பெற்ற மேலூதியப் பங்குகளை வெளியிடவும் நிறுமத்தின் தொடக்கச் செலவுகளை நீக்கிக் கொள்ளவும் மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை அல்லது கடனீட்டுப் பத்திரங்களை மீட்கும் பொழுது செலுத்த வேண்டியுள்ள முனைமத் தொகையைச் சரி செய்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**32. பொதுக் கழகத்தின் இயல்புகள்(3)**
1. தனித்தியங்கும் சட்ட தன்மை. 2. நீடித்த நிலைத்தன்மை. 3. அரசு முதலீடு. 4. நிதி தன்னாட்சியுரிமை 5. நிர்வாகம். 6. சேவை நோக்கம். 7. பணியாளர்கள். 8. உரிமை மற்றும் கடமை. 9. அரசு தலையீடின்மை 10.தன்னாட்சியுரிமை. 11. பதில் சொல்லும் கடமை. 12. தொழில் கொள்கை.

**33 வரையறுத்த கூட்டாண்மை:** ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகள் பொறுப்பு வரையறுக்க பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும். இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மை உருவாக்க சட்டம் அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இவ்வகை கூட்டாண்மை அனுமதிக்கப்படுகிறது.

**34 மாற்றற்குரிய முன்னுரிமைப் பங்குகள்** குறிப்பிட்டக் காலக் கெடுவுக்குள் முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக் கொள்ளலாம் என்றால், இவை இவ்வாறு அழைக்கப்பெறும். நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளும் உரிமை உடையவை இவை. **மாற்ற இயலா முன்னுரிமைப் பங்குகள்** முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ள முடியாதெனில், அவை இவ்வாறு அழைக்கப்படுகின்றன. முன்னுரிமைப் பங்குகள் என வெளியிடப்பட்ட பின், நிறுமத்தின் வாழ்வுக் காலத்தில் முன்னுரிமைப் பங்குகளாகவே இருக்கும்.

**35.பங்குச் சான்றிதழ்** நிறுமம் ஒன்று தனது பொது இலச்சினையைப் பொறித்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயக்குநர்களாலும், அதன் செயலரும் கையொப்பமிட்டு, அதில் பெயர் குறிப்பிட்ட உறுப்பினர் அதில் குறிப்பிட்ட பங்குகட்கு உரியவர் என்று வழங்கும் சான்றிதழ் பங்குச் சான்றிதழாகும். பங்குகளின் தனி எண்களும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். பங்குகள் மீதான உரிமைக்கு இது சான்றாக விளங்குகிறது. பகுதி செலுத்தப் பெற்றிருப்பினும், பங்குச் சான்றிதழை நிறுமம் வழங்கும். பங்குச் சான்றிதழை வைத்திருப்பவர் (அதற்குரியவர்) நிறுமத்தின் உறுப்பினராவார்.உறுப்பினர்க்குண்டான அனைத்து உரிமைகளையும் அவர் பெறுகிறார்.

**36. இயக்குநர் நீக்கம்** பதவிக் காலம் முடியு முன்னரே இயக்குநர் ஒருவரை சாதாரணத் தீர்மானம் நிறைவேற்றிப் பதவியிலிருந்து நிறுமம் நீக்கிவிடலாம். ஆனால் அவ்வாறு நீக்கப்பட்ட அவர், மோசடி நோக்கில் செயல்பட்டிருக்க வேண்டும். அல்லது தனது பொறுப்பாண்மை நிலைக்குக் குந்தகம் ஏற்படுமாறு நிறும நலனை ஒதுக்கிவிட்டுச் சொந்த ஆதாயத்துக்காகச் செயல்பட்டிருக்க வேண்டும். சில குறிப்பிட்ட சூடிநிலைகளில் மைய அரசு இயக்குநர் ஒருவரை பதவியினின்றும் நீக்கலாம். நிறுமச் செயல்பாடுகளில் பங்குநர்களைக் கொடுமைப்படுத்தும் வகையிலும், நிர்வாகம் சீர்கேட்டடையும் வகையிலும் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விண்ணப்பித்திருப்பின், அதனை ஆடீநுந்து அதனடிப்படையில் நிறுமச் சட்டத் தீர்ப்பாயம் ஒருவரை இயக்குநர் பதவியிலிருந்து நீக்க முடியும்.

**37.வியாபாரத்தின் முக்கிய பணிகள்:** 1. உற்பத்திப் பணி 2. சந்தையிடுதல் பணி 3. நிதியளிப்பு பணி 4. பணியாளர் பணி 5. கொள்முதல் பணி 6. மக்கள் தொடர்பு பணி 7. சட்டமுறை பணி

**38. .பங்கு மாற்றக வணிகத்தில் ஈடுபடுவோர்.** தன் வணிகர்கள், தரகர்கள், துணைத் தரகர், அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்

**39. கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் (3)** 1. அமைப்பது எளிது, 2. வரையறா உறுப்பினர்கள், 3. மக்களாட்சி முறையில் மேலாண்மை, 4. வரையறு பொறுப்பு, 5. நிலையான தன்மை, 6. மேலாண்மையில் சிக்கனம், 7. மலிவான சேவை, 8. வரிச் சலுகைகள் 9. சமூகப் பயன், 10. சேமிப்பு வழக்கம், 11. அரசின் ஆதரவு, 12. இடைநிலையரைத் தவிர்த்தல், 13. விலை வீழ்ச்சி, 14. வேலை வாய்ப்பு 15. அரசின் உதவி.

**40. ஆளுமை வளர்ச்சி:** 1.தன்னம்பிக்கை, தொழில் தொடங்க முயற்சி, பொறுப்புணர்ச்சி, தந்திரத்துடன் முடிவெடுத்தல் போன்ற பண்புகள் வளர்கிறது. **சிக்கன மேலாண்மை:** 1. தானே உரிமையாளராகவும் கட்டுப்பாட்டாளராக செயல்படுவதால் தனியாக மேலாளருக்கு ஊதியம் தர தேவையில்லை. 2. தொழில் நுட்பம் அறிந்த நபர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை. 3. தானே முன்னின்று செய்வதால் நிர்வாக செலவு குறைகிறது. **பொருளாதார வளங்களை சமமாக பகிர்ந்தளித்தல்:** 1. அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கி சுயவளர்ச்சிக்கு தனி வணிகம் உதவுகிறது. 2. தொழில்பரவலாக்கத்தை ஊக்கப்படுத்துவதுடன். ஒருவரிடமே அனைத்து செல்வமும் குவிதலை தடுக்கிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. பன்னாட்டு நிறுமம்**: பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும். நைல்H.ஜேகோபி – ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும். இதன் **சிறப்பியல்புகள்:** 1. ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும். 2. மிகப் பெரிய அளவில் செயல்படும். 3. அயல்நாடுகளில் உள்ள கச்சாப்பொருட்கள், பணியாட்கள் சந்தையைப் பயன்படுத்திக்கொண்டு போக்குவரத்துசெலவுகள் குறைத்தல். இன்று உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் செயல்படுகின்றன. அமெரிக்காவில் 60% சதவீத பன்னாட்டு நிறுமங்கள் ஆசிய நாடுகளில் 30% ஆப்பிரிக்காவில்10%நிறுமங்களும்செயல்படுகின்றன. **பன்னாட்டு நிறும எ.கா.:** யூனிலிவர் லிமிடெட், யூனியன் கார்பைடு, இன்டர்நேசனல் பிசினஸ் மெசின், பிலிப்ஸ்,கோகோ கோலா.

**41.ஆ. சட்டமுறைக் கூட்டம்** ஒரு பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டம் நிறுமங்கள் சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுவே சட்டமுறைக் கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. பங்குகளால் வரையறுக்கப்பட்ட அல்லது பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு வரையறு நிறுமமும் தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்குப் பின்னர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். நிறுமத்தின் வாழ்வுக் காலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது. நிறும அமைப்பு, பங்குமுதல் வெளியீடு எந்தளவு வெற்றி பெற்றிருக்கிறது, வாங்கிய சொத்துக்கள் போன்ற விவரங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பங்குநர்கட்கு வழங்கவே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கூட்ட நாளுக்கு 21 நாட்களுக்கு முன்னர் கூட்ட அறிவிக்கையுடன் சட்டமுறை அறிக்கை என்ற அறிக்கையை அனைத்து உறுப்பினர்கட்கும் அனுப்பவேண்டும். சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்துப்

பங்குநர்கள் விவாதிக்கலாம். தகவலறிக்கையில் கண்டுள்ள ஒப்பந்தங்களில் தேவையாயிருக்கும் மாற்றங்களையும் செய்யலாம்.

**42அ. உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடு சிறந்தது**

வில்லியம் பேசட் அவர்கள், "உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்றும் சிறிய தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்ய இயலும்" என்று கூறுகிறார். **தனிநபர் கட்டுப்பாட்டுக்கு சாதகமானவை** 1. எளிமையானது மற்றும் விரைவாக அமைத்தல் 2. நேரடி கட்டுப்பாடு 3. முயற்சி மற்றும் பலன் இணைதல் 4. வியாபார இரகசியங்களைக் காத்தல் 5. நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு 6. இலாபம் முழுவதையும் அனுபவித்தல் 7. சிக்கன மேலாண்மை 8. சட்ட சிக்கல் இன்மை 9. பணியாளரிடம் நேரடித் தொடர்பு 10. சமுதாய விருப்பம் **தனி நபர் கட்டுப்பாட்டின் குறைபாடுகள்** தனி நபர் கட்டுப்பாட்டில் பல்வேறு நன்மைகள் காணப்படினும் சில குறைபாடுகள் இவ்வமைப்பில் உண்டு. வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் தனி நபர் ஒருவரால் மட்டுமே மேற்கொள்ள இயலாது. தனிவணிகம் எப்போதும் ஆபத்தானது என்று தனிவணிகர் நினைக்கிறார். அவருக்கு உண்மையிலேயே எது தெரியாது என்பதும் அவருக்குத் தெரியும். என்று வில்லியம் பேசட் அவர்கள் கூறுகிறார். கீழ்வருவன தனி நபர் கட்டுப்பாட்டின் குறைகள் ஆகும். 1. அளவான முதல் 2. அளவான மேலாண் திறன் 3. வரையறாப் பொறுப்பு 4. பேரளவு தொழில் செய்ய இயலாமை 5. இடர்பாடுள்ள முடிவுகள்

6. நிலையற்ற தன்மை முடிவுரை தனி ஒரு மனிதரால் வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் திறமையாக மேற்பார்வை செய்ய இயலும் என்றால் தனி நபர் கட்டுப்பாடே, லாபத்தின் அடிப்படையிலும், திறமையின் அடிப்படையிலும் சிறந்தது எனக் கூறலாம்.

**42.ஆ. கூட்டாண்மை கலைக்கப்படும் சூழ்நிலைகள்**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43** :விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

| 43.அ. | அமைப்புமுறை ஏடு | செயல்முறை விதிகள் |
|---|---|---|
| வேற்றுமையின் பொருளடக்கம் | அடிப்படை முடிவுகளடங்கிய நிறுமத்தின் அமைப்பேடாகும். | நிறுமத்தின் உள்விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய ஏடாகும் |
| உறவு முறைகள் | நிறுமத்திற்கும் வெளி உலகிற்கும் உள்ள உறவு முறையை குறிப்பிடும் சாசனமாகும் | உறுப்பினர்களுக்கும் நிறும மேலாண்மைக்கும் உள்ள உறவினை வரையறுக்கிறது |
| பதிவு | நிறுமம் பதிவு செய்வதற்கு முன் இதனை தயார் செய்து நிறும பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். | நிறுமப்பதிவு செய்வதற்கும் இவ்வாவணம் தேவையில்லை. ஆனால் பங்குகள் மூலம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுமம் அட்டவணை அ வை பயன்படுத்தலாம். |
| மாற்றம் செய்தல் | .இதில் மாற்றம் செய்வதற்கும் கடுமையான தடைகள் உண்டு. நிறும சட்டவாரியத்தின் அனுமதி இல்லாமல் இதில் காணும் நிபந்தனைகளை மாற்ற இயலாது. | ஆனால் ஒரு சிறப்பு தீர்மானத்தின் படி இதில் உச்ச அளவு மாற்றம் செய்யலாம். ஆனால் அமைப்பு முறையேட்டிற்கும் நிறும சட்டத்திற்கும் புறம்பாக இருத்தல் கூடாது. |
| மீறல் | நிறும ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன் ஒவ்வொரு வெளிநபரும் அமைப்பு முறையேட்டின் உட்பிரிவுகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். | அமைப்பு முறையேட்டில் காணப்படும். விதிமுறைகளை நிறுமம் முழுதும் கடைபிடிக்கும் என நம்பலாம். |
| இயல்பு | . இது ஒரு சாசனமாக விளங்குவதால் இது தலைசிறந்த ஆவணமாக கருதப்படுகிறது. | ஆனால் இது நிறும அமைப்பு முறையேட்டின் துணையாவணமாகக் கருதப்படுகிறது. |

| 43.ஆ. | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப் பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத்தில் உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| குறுமப்பங் கொப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்து |
| இயக்குநர்கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| தகுதிப்பங்குகள் | இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |
| குறைவெண் | கூட்டம் செல்லத்தக்கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**44.அ. நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும்** : 1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தணுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**44.ஆ. கூட்டுறவு சிறப்பங்காடியின் சிறப்பியல்புகள்**

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம் தவிர்க்கப்படும்

7.சரியான அளவு எடை குறை என்ற நிலை ஏற்படுவது இல்லை.

8.அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படும்.

**45.அ. செபியின் நோக்கம் இயல்புகள்:**

**நோக்கம்** : 1.முதலீட்டாளர்களின் நலனை பாதுகாத்தல் 2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல். அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது.

**இயல்பு:**1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும். 2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும். 3.(அ)சபைத்தலைவர்கள் (ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள் (இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் (ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல்

**45.ஆ. ஆண்டுப் பொதுக் கூட்டம்** பிற கூட்டங்கள் மட்டுமின்றி, ஒவ்வொரு நிறுமமும், ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். நிறுமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் நிறுமத்தின் முதல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். பின்னர் இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கிடையே உள்ள கால இடைவெளி 15 மாதங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். **இயக்குநர் அவைக் கூட்டங்கள்** இயக்குநர்கள் கூட்டங்கள் இயக்குநர் அவைக் கூட்டங்கள் அல்லது அவைக் கூட்டங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. நிறுமத்தின் திட்டங்கள், கொள்கைகள் இக்கூட்டங்களில்தான் வகுக்கப்படுகின்றன. **அசாதாரண பொதுக்கூட்டம் / சிறப்பு பொதுக் கூட்டம்** சட்டமுறைக் கூட்டத்தையும், ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் தவிர நடைபெறும் வேறு எந்தப் பொதுக்கூட்டமும் சிறப்புப் பொதுக்கூட்டம் அல்லது அசாதாரணப் பொதுக்கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு அவசரமான அல்லது சிறப்பான பொருள் குறித்த தீர்மானத்தை அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை தள்ளிப்போட இயலா நிலையில், இயக்குநர் அவை தானே முன் வந்தோ அல்லது சில நிபந்தனைகட்கு உட்பட்டு அதன் உறுப்பினர்கள் வேண்டுதலுக்கு இணங்கியோ இக்கூட்டம் கூட்டப்பெறுகிறது.

**46.அ. கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய முறைகள் :** கூட்டுறவு சங்கச் சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சங்கத்தின் படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு ஊரைச் சேர்ந்த பொதுநலம் உள்ள ஏதேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவுச் சங்கத்தை தோற்றுவிக்கலாம்.
கூட்டுறவுச் சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விருப்பத்தை விண்ணப்படிவ மூலம் தெரிவிக்க வேண்டும். அந்த விண்ணப்ப படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பெயர். அதில் சங்கத்தின் பெயரும், விலாசமும், நோக்கங்களும், முதல் உறுப்பினரின் பொறுப்பு ஆகியவற்றை குறிக்கவேண்டும். விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகளையும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இணைத்திருக்க வேண்டும். மேலாண்மை செய்யும் முறை கூட்டம் நடைமுறைகள் தீர்மானங்கள் ஆகியவற்றை துணை விதிகளில் குறிப்பிட வேண்டும்.பதிவாளர் பத்திரங்களை முறையாக பரிசீலித்து அவை சட்டப்படி உள்ளனவா என்பதை ஆய்வு செய்வார்.அவர் முழு திருப்தியடைந்தவுடன் சங்கத்தினுடைய பதிவேடுகளில் கூட்டுருவாக்க பதிவு சான்றிதழைக் கொடுப்பார்.இச்சான்றிதழ் கொடுத்த பின் அச்சங்கம் சட்ட உருவைப் பெற்று தனி ஆளுமையைப் பெறுகிறது.

**46.ஆ. பங்கு மாற்றகம் இலக்கணம்(ம) பணிகள் :** வேரஸ்டின் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவு மற்றும் விற்பவர் ஒரு அடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஓரிடமே ஆகும். **பங்கு மாற்றகங்களின் பணிகள் 1. உடனடிச் சந்தை** பங்கு மாற்றகம் பத்திரங்களுக்கு நீர்மை தன்மையையும் உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தையையும் ஏற்படுத்துகிறது. இதனால் தங்கள் சேமிப்பைக் குறுகிய காலத்துக்குக் கூட முதலீடு செடீநுய மக்களை ஈர்க்கின்றது. **2. சேமிப்பைத் திரட்டுதல்** தனிப்பட்டோர், வியாபார நிறுவனம், கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றின் சேமிப்பைத் திரட்டி பத்திரங்களில் முதலீடு செய்ய பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன. **3. பிணையங்களின் மதிப்பீடு** பல்வேறு வகையான பங்குகள் மற்றும் பிணையங்களின் விலையைத் தீர்மானிக்க பங்குமாற்று நிலையம் உதவுகிறது. பங்குகளின் விலைகளும் அங்கு நடைபெறும் பேரங்களின் ஏனைய விவரங்களும் பதிவு செய்யப்பட்டு அதிகாரப்பூர்வமான விலைகளாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. இவற்றைக் கொண்டு அப் பிணையங்களை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் அவற்றின் நடப்பு விலைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. **4. மூலதன ஆக்கம்** பங்கு மாற்றகம் சேமிப்பைத் திரட்டுவதுடன் பொதுமக்களை சேமிக்கவும் தூண்டுகிறது. இது மூலதன ஆக்கத்திற்கு வழிவகுக்கின்றது. **5 மூலதனத்தை சரியான முறையில் வழிப்படுத்துதல்** பங்கு மாற்றகம் சேமிப்பை உற்பத்தி வழிகளில் செலுத்துகின்றது. செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிறுமம் அதிக முதலீடு பெறுவதற்காக பங்குகளை வெளியிடுமாயின், இலாபகரமாக இயங்கும் தன்மை பெற்றிருந்தால்தான் அந்நிறுமம் முதலீடு பெற முடியும். பலவீனமான நிறுவனங்களின் பிணையங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து ஆதரவு கிடைப்பதில்லை. **6. நியாயமான வாணிப தொடர்பு** பங்கு மாற்றகங்களின் நடவடிக்கைகள் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடைபெறுவதால் நியாயமான வாணிபமும், முதலீடு செய்யப்படும் பணத்துக்குப் பாதுகாப்பும் கிடைக்கின்றது. இதன் உறுப்பினர்கள் இவற்றின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதால், அதிக அளவு வாணிபம் சட்ட விரோதமான ஊக வாணிபம் மற்றும் சூடிநச்சித் திறத்துடன் கையாளுதல் போன்றவை தடுக்கப்படுகின்றன. இவற்றால் சராசரி முதலீட்டாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. **7. நிறும மேலாண்மையை ஒழுங்கு படுத்துதல்** பங்கு மாற்றகங்களில் தங்கள் பத்திரங்களைப் பட்டியலிட நிறுமங்கள் பங்கு மாற்றகங்கள் விதிக்கும் பல சட்ட திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டியுள்ளது. பங்கு மாற்றகங்கள் தங்களுடைய சட்ட திட்டங்கள் மூலம் நிறுமங்களின் மேலாண்மையில் செயல் விளைவுகளை உண்டாக்குகின்றன. இவ்வாறாக பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களின் நலனுக்காக நிறுமங்களின் மேலாண்மையை ஒழுங்குபடுத்துகின்றன. **8.தொழில் வளர்ச்சியின் அளவீடு** நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாக பங்கு மாற்று நிலையம் செயல்படுகின்றது. பூரிப்பும் மந்தமும் பல்வேறு பத்திரங்களின் விலைக் குறியீட்டினால் பிரதிப்பலிக்கப்படுகின்றன.

**47.அ) துறைவாரி அமைப்பின் குறைபாடுகள்:**
**1. அரசு தலையீடு:** கொள்கைகளை அரசு தலையீடின்றி சுதந்திரமாக அமைக்க முடிவதில்லை. மேலும், அரசு தலையீடு, முடிவுகள் எடுப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துகிறது. **2. தகுதிவாய்ந்த அலுவலர் இன்மை:** வணிக கண்ணோட்டம் அற்ற, தொழில் நுட்பமறியா அரசு அலுவலர்களே பொறுப்பிற்கு வருகின்றனர். **3. மைய அதிகாரம்:** தொழில்துறை காரணங்கள் புறக்கணிக்கப்பட்டு நெகிழ்வற்ற, மரபுமாறா நடைமுறை பின்பற்றப்படுகிறது. **4. தாமதம்:** அரசியல் தலையீடு, மைய அதிகாரம் இவைகளால் இத்துறை செயல்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. **5. வரிச்சுமை:** இத் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் நட்டம் காரணமாக அதை ஈடுசெய்ய அரசு பொதுமக்களுக்கு மேன்மேலும் வரிவிதிக்கலாம்

**47.ஆ. நாணய சங்கம்** : 1. வேளாண்மை கடன் சங்கம் 2. வேளாண்மை கடன் சாராசங்கம்
**வேளாண்மை கடன் சங்கம்** 1. கிராமப்புற கடன் சங்கம் 2. பிரதம சங்கங்கள் **வேளாண்மை கடன் சாரா சங்கம்** 1.நகர வங்கிகள் 2. பணியாளர் சங்கம் 3. தொழிலாளிக் கடன் சங்கங்கள்
**நாணயம் சாரா சங்கங்கள் :** 1.வேளாண்மை சாரா கடன் சங்கங்கள் 2. வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள் **வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்** 1.கூட்டறவு சந்தையிடுதல் 2.கூட்டறவு பண்ணைகள் 3.தொழிற்சாலை கூட்டுறவு
**வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்**
1.நுகர்வோர் கூட்டுறவு 2.உற்பத்தியாளர் கூட்டுறவு 3.கூட்டுறவு வீட்டு வசதி 4.கூட்டுறவு பண்டகசாலை